**நவம்பர் – 09**

# TNPSC துளிகள்

- உலகின் மிகப்பெரிய 25 முதல் 27 செ.மீ இறக்கைகள் கொண்ட அரிய வகை அட்லஸ் அந்துப்பூச்சியானது, சமீபத்தில் கர்நாடகாவின் கார்வாரில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தென்பட்டது.
- இந்தியாவில் பிறந்த கசலா ஹாஷ்மி விர்ஜீனியாவின் துணை நிலை ஆளுநர் தேர்தலில் வெற்றி பெற்று, இப்பதவியை வகிக்கும் முதல் தெற்காசிய அமெரிக்க மற்றும் இந்திய வம்சாவளிப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு ஹுருன் பெருந்தகைமை பட்டியலின் படி, ஆண்டிற்கு 2,708 கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகளுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்காவது முறையாக, சிவ் நாடார் மற்றும் அவரது குடும்பத்தினர் இந்தியாவின் மிகவும் தாராள மனப்பான்மை கொண்டவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, குஜராத்தின் வல்சாத்தில் செயல்பட்டு வந்த பல மாநில போதைப்பொருள் வலையமைப்பை "ஒயிட் கோல்ட்ரான் நடவடிக்கையின்" கீழ் அகற்றியுள்ளது.
- தாலிபான் அரசாங்கம் ஆனது, இந்த மாதம் இந்தியாவில் தனது முதல் தூதரை நியமிக்க உள்ளது, இது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் காபூலைக் கட்டுப்பாட்டில் எடுத்ததிலிருந்து அதன் முதல் அதிகாரப்பூர்வ ஆப்கானியத் தூதர் நியமனத்தைக் குறிக்கிறது.
- அமெரிக்க அரசாங்க முடக்கம் ஆனது, 36 நாட்களை எட்டியுள்ளது, இதற்கு முன்னதாக பதிவான முடக்கத்தினையும் கடந்துள்ள இது 1.4 மில்லியன் தொழிலாளர்களைப் பாதித்து 14 பில்லியன் டாலர் இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
- ஈராக் போர் மற்றும் 9/11 தாக்குதலுக்குப் பிந்தைய "war on terror - தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை" ஆகியவற்றின் முக்கியச் சிற்பியுமான/நபருமான அதிபர் ஜார்ஜ் W. புஷ் தலைமையின் கீழ் பணியாற்றிய முன்னாள் அமெரிக்க துணை அதிபர் டிக் செனி சமீபத்தில் காலமானார்.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் தேதியன்று மசார்-இ-ஷெரீஃப் அருகே வடக்கு ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட 6.3 ரிக்டர் அளவிலான நில நடுக்கத்தில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2வது வியாபர் தமிழ்நாடு




- வாகன விற்பனையாளர்கள் அமைப்புகள் சங்கக் கூட்டமைப்பின் (ஆட்டோமொபைல் டீலர்ஸ்) (FADA) 19 வது வியாபார் மற்றும் 2 வது வியாபர் தமிழ்நாடு நிகழ்ச்சி சமீபத்தில்

நடைபெற்றது.

- இந்த நிகழ்வின் கருத்துரு 'From India's Detroit to Its Digital Destiny' என்பதாகும்.
- இந்தியாவின் தானியங்கி வாகன பாகங்கள் உற்பத்தியில் தமிழ்நாடு 42 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.

## காவேரி நதியில் கன உலோக மாசுபாடு




- காவிரி நதியில் பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் அதில் படிந்திருந்த வண்டல்களில் கன உலோகங்கள் கண்டறியப்பட்டன.
- இந்த ஆய்வு ஆனது, 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதங்களுக்கு இடையில் நடத்தப்பட்டது.
- பல்வேறு மீன் இனங்களில் பாதுகாப்பான வரம்புகளை மீறி, அதிக அளவு காட்மியம் மற்றும் ஈயம் இருப்பது கண்டறியப்பட்டது.
- இந்த ஆய்வானது, 18 வண்டல் படிவு தளங்கள் மற்றும் ஆற்றங்கரையோரத்தில் உள்ள 10 மீன் பிடிப்பு மாதிரித் தளங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- தொழில்துறை கழிவுகள், வேளாண் கழிவுநீர் மற்றும் நகர்ப்புற கழிவுநீர் ஆகியவை மாசுபாட்டின் முக்கிய ஆதாரங்களாக அடையாளம் காணப்பட்டன.
- ஆற்றில் இருந்து பெறப்படும் மீன்களை வழக்கமாக நுகர்வது, கன உலோகச் செறிவு காரணமாக சுகாதார அபாயங்களை ஏற்படுத்தக் கூடும் என்று இந்த ஆய்வு எச்சரித்தது.

# தேசியச் செய்திகள்

## வழக்கு தாரர்களின் சுயாட்சிக் கோட்பாடு

- வழக்கு தாரர்களின் சுயாட்சிக் கோட்பாடு வரம்பற்றது அல்ல என்றும், மேலும் அது நடுவர் மன்றத்தின் அடிப்படை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.
- சச்சரவுகளைத் தீர்க்கும் செயல்முறையைத் தேர்ந்தெடுக்கும் வழக்குதாரர்களின் சுதந்திரம் கட்சி சுயாட்சி என்று அழைக்கப்படுகிறது.
- இது சட்டங்கள், நடுவர் செயல்முறை மேற்கொள்வதற்கான இடம், நடுவர்களைத்

தேர்ந்தெடுப்பது போன்றவற்றைத் தீர்மானிக்கும் சுதந்திரத்தை வழக்குதாரர்களுக்கு வழங்குகிறது.

- 2021 ஆம் ஆண்டில், "வழக்குதாரர்களின் சுயாட்சி என்பது நடுவர் மன்றத்தின் வழிகாட்டும் கொள்கை" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இந்தக் கருத்து ஆனது நியூயார்க் உடன்படிக்கை மற்றும் 1996 ஆம் ஆண்டு இந்திய நடுவர் மற்றும் சமரச சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.




## ISA 2025 கூட்டணியில் உலகளாவிய சூரிய சக்தி முன்னெடுப்புகள்




- சூரிய மின்சக்தி கழிவுகளை மறுசுழற்சி செய்து பசுமைத் தொழில் துறை சார் வாய்ப்புகளாக மாற்ற இந்தியா SUNRISE முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- SUNRISE என்பது மறுசுழற்சி, புதுமை மற்றும் பங்குதாரர் ஈடுபாட்டிற்கான சூரிய சக்தி மேம்பாட்டு வலையமைப்பு என்பதைக் குறிக்கிறது.
- ஆசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் பன்னாட்டு சூரிய மின்சக்தி இணைப்புகளை ஊக்குவிப்பதற்காக இந்தியா OSOWOG என்ற (One Sun One World One Grid) முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவில் சூரிய மின்சக்தி ஆராய்ச்சி, புதுமை மற்றும் பயிற்சிக்கான மையமாக உலகளாவிய திறன் மையம் (GCC) தொடங்கப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் தளமான ISA அகாடமி, உலகளவில் சூரிய

சக்தி தொழில்நுட்பத்தில் தனிப்பயனாக்கப்பட்ட கற்றலை வழங்கும்.

- தீவு நாடுகளுக்கான சூரிய மின்சக்தி கொள்முதல் மற்றும் நிதியுதவியை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தியாவும் உலக வங்கியும் SIDS (வளர்ந்து வரும் சிறிய தீவு நாடுகள்) கொள்முதல் தளத்தை உருவாக்கின.
- சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணியில் தற்போது 125 உறுப்பினர் நாடுகள் மற்றும் கையொப்பமிட்ட நாடுகள் சூரிய மின்மயமாக்கல், சிறிய மின் கட்டமைப்புகள் மற்றும் கிராமப்புற மின்மயமாக்கலில் ஈடுபட்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## ASEAN பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு-பிளஸ் 2025




- 12வது ASEAN பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு பிளஸ் (ADMM-Plus) நிகழ்வானது, மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்றது.
- இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் "Reflection on 15 Years of ADMM-Plus and Charting the Way Forward" என்ற தலைப்பில் மன்றத்தில் உரையாற்றினார்.
- மலேசியாவின் தலைமையின் கீழ் ஆசியான்-இந்தியா பாதுகாப்பு அமைச்சர்களின் முறைசாரா சந்திப்பும் நடைபெற்றது.
- ASEAN (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்) மற்றும் இந்தியா இடையே பாதுகாப்பு மற்றும் காவல் சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்த சந்திப்பு கவனம் செலுத்தியது.
- ADMM-Plus நிகழ்வில், ASEAN அமைப்பின் 10 உறுப்பினர்களும், இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய எட்டுப் பேச்சுவார்த்தை பங்குதாரர்களும் பங்கேற்றனர்.
- 2024–2027 ஆம் ஆண்டின் சுழற்சிக்கான தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான நிபுணர்கள் பணிக்குழுவிற்கு மலேசியாவுடன் இணைந்து இந்தியா தலைமை தாங்கியது.

## G2 உச்சி மாநாடு 2025

- தென் கொரியாவின் புசானில் நடைபெற்று வரும் G2 உச்சி மாநாட்டிற்காக சீன அதிபர் ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் சந்தித்தனர்.
- வர்த்தகப் போரின் தீவிரத்தினைக் குறைக்கவும், இரு நாடுகளுக்கும் இடையேயான மூலோபாய உறுதித் தன்மையை வலுப்படுத்தவும் இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

- ஃபெண்டானில் உள்ளிட்ட சீனப் பொருட்களின் மீதான வரிகளை 20% முதல் 10% வரை குறைக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டது.
- அமெரிக்க சோயா அவரைகளை பெரிய அளவில் வாங்குவதை மீண்டும் தொடங்கவும், அருமண் தாதுக்கள் மீதான ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நீக்கவும் சீனா ஒப்புக் கொண்டது.
- அருமண், காலியம், ஜெர்மானியம், ஆண்டிமனி மற்றும் கிராஃபைட் ஆகியவற்றிற்கான பொதுவான ஏற்றுமதி உரிமங்களை சீனா வழங்கும் என்று வெள்ளை மாளிகையின் தகவல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.




## சாபஹார் துறைமுகத்திற்கான அமெரிக்கத் தடைகள் விலக்கு




- ஈரானின் சாபஹார் துறைமுகத்தை இயக்குவதற்காக, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதியன்று அமெரிக்கா இந்தியாவிற்கு ஆறு மாத தடை விலக்கு அளித்தது.
- இந்த விலக்கு ஆனது, பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசியாவுடனான வர்த்தகத்தை மேம்படுத்த இந்தியாவை அனுமதிக்கிறது.
- ஓமன் வளைகுடாவில் உள்ள துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் இந்தியா 2024 ஆம் ஆண்டில் ஈரானுடன் பத்து ஆண்டு கால ஒப்பந்தத்தில்


கையெழுத்திட்டது.

- சாபஹார் துறைமுகமானது, பிராந்திய இணைப்பை ஆதரிப்பதோடு, பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை ஆப்கானிஸ்தான் சார்ந்திருப்பதைக் குறைக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனம்

- மதராசின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குறைந்த விலை, குறைந்தபட்ச ஊடுருவல் கொண்ட தொடர்ச்சியான குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சாதனம் ஆனது வெளிப்புறக் கண்காணிப்பு தேவையில்லாமல், குளுக்கோஸ் அளவீடுகளை நேரடியாக ஒரு தோல் ஒட்டு சாதனத்தில் காட்டுகிறது.
- இது மீண்டும் பயன்படுத்தக் கூடிய மின்னணுவியல், குறைந்த ஆற்றலில் இயங்கும் திரை மற்றும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நுண் ஊசி கொண்ட உணர்வுப் பதிவு ஒட்டு சாதனம் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.
- இந்த அமைப்பின் குறைந்த ஆற்றல் பயன்பாடு வடிவமைப்பு ஆனது, மின் கலத்தின் நீடிப்பினை நன்கு அதிகரிக்கிறது மற்றும் மீண்டும் மீண்டும் மின்னேற்றுவதற்கான தேவையைக் குறைக்கிறது.




## SMART-CROP திட்டம்

- SMART-CROP திட்டம் ஆனது SBI அறக்கட்டளை, ராய்ச்சூரில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக் கழகம் (UAS), பகுதியளவு வறண்ட வெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) மற்றும் அக்ரிபிரிட்ஜ் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டாண்மை மூலம் தொடங்கப்பட்டது.
- SMART-CROP என்பது பயிர்களின் தகவமைப்பு மற்றும் உகந்த நடைமுறைகளுக்கான


நிலையான கண்காணிப்பு மற்றும் நிகழ்நேரக் கண்காணிப்பைக் குறிக்கிறது.

- கர்நாடகா (பிடார், கலபுராகி, ராய்ச்சூர்) மற்றும் தெலுங்கானா (சங்கரெட்டி, விகாராபாத்) ஆகிய இடங்களில் உள்ள 8,000க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளின் தகவமைப்பு மற்றும் உற்பத்தி திறனை வலுப்படுத்துவதை இந்த மூன்று ஆண்டு காலத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பயிர் நெருக்கடியின் நிகழ்நேரக் கண்காணிப்பை வழங்க செயற்கைக்கோள் வரைபடமாக்கல், தொலை உணர்வுக் கருவி மற்றும் செயற்கை நுண்ணறிவு / இயந்திரக் கற்றல் (AI/ML) பகுப்பாய்வு போன்ற மேம்பட்ட தொழில் நுட்பங்களை இந்த திட்டம் பயன்படுத்துகிறது.
- இந்தத் திட்டமானது பருப்பு பயிர்கள், குறிப்பாக கொண்டைக் கடலை மற்றும் துவரம் பருப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- மகசூலில் உள்ள இடைவெளிகள் மற்றும் வேளாண் சூழலியல் நன்மைகளை மதிப்பிடுவதற்கான டிஜிட்டல் சேர்க்கை, விவசாயிகள் பங்கேற்பு சார்ந்த அணுகு முறைகள் மற்றும் சமூக-பொருளாதார மதிப்பீடுகளையும் இது உள்ளடக்கியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### பாம்பாடும் சோலை தேசியப் பூங்காவில் புல்வெளிகளின் மீளுருவாக்கம்



- கேரளாவில் உள்ள பாம்பாடும் சோலை தேசியப் பூங்காவானது, அயல் ஊடுருவல் இனமான ஆஸ்திரேலிய வாட்டில் மரங்களை அகற்றுவதன் மூலம் அதன் பூர்வீகப் புல்வெளிகளை மீட்டெடுக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் 1,900 முதல் 2,300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, 1,300 ஹெக்டேர்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டுள்ளது.
- கேரளாவின் 2021 ஆம் ஆண்டு கால சுற்றுச்சூழல் மீளுருவாக்கக் கொள்கை, 600 ஹெக்டேர் பரப்பிலான பகுதிகளை மீட்டெடுக்கும் திட்டங்களுடன் அயல் ஊடுருவல் இனங்களை அகற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பிற பகுதிகளிலும் அதற்கு அப்பாற்பட்டப் பகுதிகளிலும் வெப்பமண்டல மலைப்பகுதி சுற்றுச்சூழல் மீளுருவாக்கத்திற்கான ஒரு மாதிரியாக இந்தத் திட்டம் ஆய்வு செய்யப் பட்டு வருகிறது.

## வேடந்தாங்கல் சரணாலயத்தில் வலசை போகும் பறவைகள்

- தமிழ்நாட்டில் உள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில், வருடாந்திரப் பறவைகள் கூடு கட்டும் பருவத்தில் 20க்கும் மேற்பட்ட வலசை போகும் பறவை இனங்களின் வருகையானது பதிவாகியுள்ளது.
- சென்னையிலிருந்து சுமார் 90 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்தச் சரணாலயம், தற்போது 15,000க்கும் மேற்பட்ட பறவைகளைக் கொண்டுள்ளது.
- நத்தைக் குத்தி நாரைகள், வெள்ளை அரிவாள் மூக்கன், சாம்பல் நிற நாரை, கொக்குகள் மற்றும் கூழைக் கடா போன்ற பறவை இனங்கள் இங்கு காணப்பட்டு உள்ளன.




## உம்ங்கோட் நதிப் பிரச்சினை - மேகாலயா

- ஷில்லாங்-டாவ்கி வழித்தட கட்டுமானத் திட்டம் ஆனது, உம்ங்கோட் நதி நீரின் தரத்தை மோசமாக்கியுள்ளது.
- கட்டுமானம் மற்றும் இடிப்புக் கழிவுகள் உம்ங்கோட் நதியின் துணை நதிகளில் கொட்டப்பட்டன.

- ❖ எனவே அந்த நதி சேறும் சகதியுமாக மாறியதால், சுற்றுலா மற்றும் உள்ளூர் வாழ்வாதாரத்தை அது பாதித்தது.
- ❖ இந்த நதி மேற்கு ஜெயின்சியா மலை மாவட்டம் வழியாகப் பாய்கிறது என்பதோடு மேலும் டவ்கி மற்றும் ஷ்னோங்ப்டெங் போன்ற இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.
- ❖ இந்த நதி அதன் படிக அளவிலான தெளிவான நீருக்குப் பிரபலமானது.




## மாநிலச் செய்திகள்

### இந்தியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டம்



- மேற்கு வங்காளத்தில் உள்ள வடக்கு 24 பர்கானாக்கள் தற்போது இந்தியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டமாக உள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டு நிலவரப் படி சுமார் 10.9 மில்லியன் மக்கள்தொகையைக் கொண்டுள்ளது.
- சுமார் 4,094 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ள இந்த மாவட்டம், ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2,469 மக்கள் மக்கள் தொகை அடர்த்தி கொண்டது.
- இது கொல்கத்தா பெருநகரப் பகுதியின் ஒரு பகுதியாகும் என்பதோடு இது பராக்பூர் மற்றும் பிதான்நகர் போன்ற நகரங்களை உள்ளடக்கியது.
- 1947 ஆம் ஆண்டு பிரிவினைக்குப் பிறகு விரைவான நகரமயமாக்கல், தொழில்துறை வளர்ச்சி மற்றும் அகதிகள் குடியிருப்புகள் அதன் மக்கள்தொகை வளர்ச்சிக்குப் பங்களித்தன.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அம்மாவட்டத்தில் சுமார் 84 சதவீத கல்வியறிவு விகிதம் பதிவானது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகின் மிக வயதான ஒலிம்பிக் சாம்பியன் - சார்லஸ் கோஸ்டே




- பிரான்சின் மிக வயதான ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற சார்லஸ் கோஸ்டே காலம் ஆனார்.
- இவர் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடைபெற்ற முதல் விளையாட்டுப் போட்டியான 1948 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியில் குழு சைக்கிள் பந்தயத்தில் தங்கம் வென்றார்.
- 1949 ஆம் ஆண்டில், இத்தாலிய சைக்கிள் ஓட்டும் வீரர் ஃபாஸ்டோ கோப்பியை தோற்கடித்து கிராண்ட் பிரிக்ஸ் டெஸ் நேஷன்ஸ் பட்டத்தினை வென்றார்.
- அவரது 99வது வயதில், 2024 ஆம் ஆண்டு பாரிசு விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒலிம்பிக் ஜோதியை அவர் ஏந்திச் சென்றார்.

## பிரவாசி பரிசாய் விழா

- ரியாத்தில் உள்ள இந்தியத் தூதரகம் ஆனது ஒரு வார காலக் கலாச்சார விழாவான மூன்றாவது பிரவாசி பரிசாய் விழாவினைத் தொடங்கியுள்ளது.

- இந்த விழா முதன்முதலில் 2023 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவில் உள்ள இந்தியப் புலம்பெயர்ந்தோர் சங்கங்களுடன் இணைந்து நிறுவப்பட்டது.
- பிரவாசி பரிசாய் நிகழ்வில் இந்தியப் பாரம்பரிய நடனம், இசை, நாட்டுப்புறக் கலை மற்றும் சமையல் மரபுகளைக் காண்பிக்கும் மாநில அளவிலான கருப்பொருள் சார்ந்த விழாக்கள் அடங்கும்.
- இந்த விழா அக்டோபர் 31 ஆம் தேதியன்று வரும், இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற விழுமியங்களை எடுத்துக் காட்டுகின்ற தேசிய ஒற்றுமை தினத்துடன் ஒருங்கே அமைகிறது.




# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய ஹாக்கி அமைப்பின் நூற்றாண்டு நிறைவு





- இந்தியா நாடு முழுவதும் சிறப்பு நிகழ்வுகளுடன் ஹாக்கி அமைப்பின் 100 ஆம் ஆண்டு

நிறைவைக் கொண்டாடியது.

- நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக 550 மாவட்டங்களில் 1400க்கும் மேற்பட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.
- இதன் முதன்மைப் போட்டியானது புது டெல்லியில் உள்ள மேஜர் தியான் சந்த் தேசிய மைதானத்தில் நடைபெற்றது.
- ஹாக்கி ஜாம்பவான்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பதோடு, மேலும் "இந்திய ஹாக்கியின் 100 ஆண்டுகள்" என்ற நினைவுப் புத்தகம் வெளியிடப்பட்டது.
- இந்திய ஹாக்கி அமைப்பின் பயணம் ஆனது, 1925 ஆம் ஆண்டில் ஹாக்கி விளையாட்டைத் தேசிய அளவில் நிர்வகிக்கவும் ஊக்குவிக்கவும் இந்திய ஹாக்கி கூட்டமைப்பு (IHF) உருவாக்கப்பட்டதுடன் தொடங்கியது.

# இதரச் செய்திகள்

## ஜன்ஜாதிய கௌரவ் வர்ஷ் பக்வாடா





- பழங்குடியின வீரர்களையும் அவர்களின் பங்களிப்புகளையும் கௌரவிப்பதற்காக நாடு தழுவிய அளவில் ஜன்ஜாதிய கௌரவ் வர்ஷ் பக்வாடா (நவம்பர் 1–15, 2025) தொடங்கியது.
- முன்னணிப் பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரரான பகவான் பிர்சா முண்டாவின் 150வது பிறந்தநாளை இந்தக் கொண்டாட்டம் குறிக்கிறது.
- பழங்குடியினரின் பாரம்பரியத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 15 ஆம் தேதியன்று ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.

## குருநானக் ஜெயந்தி 2025

- குருபுரப் என்றும் அழைக்கப்படுகின்ற குருநானக் ஜெயந்தி 2025 ஆனது, இது சீக்கிய மதத்தின் நிறுவனர் குருநானக் தேவ் ஜியின் 556வது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- நவம்பர் 05 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகின்ற இது கார்த்திக் பூர்ணிமாவுடன்

ஒன்றி வருகிறது என்பதோடு மேலும் இது அமைதி, சமத்துவம் மற்றும் ஒரே கடவுள் கொள்கையைக் குறிக்கிறது.

- அவர் 1469 ஆம் ஆண்டு ராய் போய் கி தல்வண்டியில் (தற்போது நான்கானா சாஹிப், பாகிஸ்தான்) பிறந்தார்.
- குருநானக் ஆசியா முழுவதும் உண்மை, இரக்கம் மற்றும் சேவை பற்றிய செய்திகளைப் பரப்பினார்.
- பொற்கோயில் (அமிர்தசரஸ்), பங்களா சாஹிப் (டெல்லி) மற்றும் கர்தார்பூர் சாஹிப் (பாகிஸ்தான்) ஆகியவற்றில் முக்கிய கொண்டாட்டங்கள் நடைபெற்றன.
- குருநானக்கின் நாம் ஜப்னா (தியானம்), கிராத் கர்னி (நேர்மையான பணி) மற்றும் வந்த் சக்னா (பகிர்வு) போன்ற போதனைகள் உலகளாவிய நல்லிணக்கத்தைத் தொடர்ந்து ஊக்குவிக்கின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★